## இளந்தளிரின் நிறம்





## முதிர்ந்த இலையின் நிறம்




## தண்டின் நிறம்




## கிழங்கின் வடிவம்




ஸ்ரீ அதுல்யா ஸ்ரீ அபூர்வா ஸ்ரீ அதுல்யா ஸ்ரீ அபூர்வா

| | |
|---|---|
| இடைவெளி | 90X90 செ.மீ |
| தொழு உரம் (FYM) | 12.5 டன்/ஹெக்டேர் |
| தழைச்சத்து : மணிச்சத்து : சாம்பல்சத்து (NPK) | 100:50:100 கிலோ/செடி |
| செடிகளின் எண்ணிக்கை | 12,500/ஹெக்டேர் |
| நடவு முறை | மேடு /பாத்தி/ படுக்கை |


### ஒப்புகை

ஸ்ரீ அதுல்யா மற்றும் ஸ்ரீ அபூர்வா இரகங்கள் வெளியிட உதவிய விஞ்ஞானிகளுக்கும் இதர ஊழியர்களுக்கும் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித்திட்டத்திற்கும் (அஇஒஆதி-கிழங்குபயிர்கள்) இக்கணம் நன்றி செலுத்த கடமைப்பட்டுளோம்.

விரிவாக்க கோப்புறை எண்: 03/2019, July 2019



### தயாரிப்பு

முனைவர் மா. நீ, ஷீலா, முனைவர் ச. விசாலாக்ஷி சந்திரா
முனைவர் க. மு. செந்தில்குமார்



### வெளியீடு

**முனைவர் அர்ச்சனா முகர்ஜி**
இயக்குனர்
ICAR- மத்திய கிழங்கு பயிர்கள்ஆராய்ச்சி நிலையம்
ஸ்ரீகாரியம், திருவனந்தபுரம்-695017, கேரளா, இந்தியா
தொலைபேசி : 0471-2598551 தொலைநகல் :0471-2590063
மின்னஞ்சல்: director.ctcri@icar.gov.in
வலைத்தளம்: https://www.ctcri.org




# மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தின் அதிக விளைச்சல் மற்றும் மாவுச்சத்து நிறைந்த மும்மைய இரகங்கள்

# ஸ்ரீ அதுல்யா & ஸ்ரீ அபூர்வா





ICAR- மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிலையம்
ஸ்ரீகாரியம், திருவனந்தபுரம்-695017
கேரளா, இந்தியா

## மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தின் அதிக விளைச்சல் மற்றும் மாவுச்சத்து நிறைந்த மும்மைய இரகங்கள்

மரவள்ளியின் மரபணு முன்னேற்றத்திற்கு மும்மைய இனப்பெருக்கத்தின் இன்றியமையாமை இந்தியாவில் நன்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மும்மைய இரகங்களின் வளரும் தன்மை நெருக்கமான பயிறுடுதல் முறைக்கு உகந்ததால் இந்த இரகங்கள் உழவியல் சிறப்பு பெற்று விளங்குகின்றன. அதிக உளர் பொருள் மற்றும் பிரித்து எடுக்கக்கூடிய மாவுச்சத்து கொண்டவைகளாக இந்த இரகங்கள் விளங்க அதன் மும்மைய தன்மையே காரணமாகும். மரவள்ளியின் மும்மைய கலப்புயிரிகள், சூழ்நிலை மாற்றத்துக்கு ஏற்றவாறு முந்தைய அறுவடை திறனும் அதிக இணக்கத்திறன் கொண்டவகைகளாக விளங்குகின்றன. அண்மையில் இரண்டு மும்மைய கலப்புயிரிகளான ஸ்ரீ அதுல்யா மற்றும் ஸ்ரீ அபூர்வா இரகங்கள் மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டு தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது.

### ஸ்ரீ அதுல்யா

ஸ்ரீ அதுல்யா எனப்படும் மும்மைய மரவள்ளி இரகமானது இருமைய மரபணுப்படியான OP-4 மற்றும் ஸ்ரீ விசாகத்தின் தூண்டப்பட்ட நான்மயத்தின் இனச்சேர்க்கையால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இரகம் பத்து மாதங்களில் முதிரக்கூடியதாகவும் தமிழ்நாடு மற்றும் கேரளாவின் மானாவாரி மற்றும் நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் நடவு செய்ய உகந்ததாகவும் விளங்குகின்றது. இந்த இரகமானது தமிழ்நாட்டின் பிரபலமான H-226 (24.8 டன்/ஹெக்டேர்) மற்றும் உள்ளூர் இரகமாகிய முள்ளுவாடியை (26.1 டன்/ஹெக்டேர்) விட அதிக மகசூல் (39.00 டன் /ஹெக்டேர்) தரக்கூடியது. இதன் பிரித்து எடுக்கக்கூடிய மாவுச்சத்து அளவு (30.2%), H-226 (24.1%) மற்றும் முள்ளுவாடியை (25.2%) விட மிக அதிகமானது. இதன் அதிக மகசூல் மற்றும் அதிக பிரித்து எடுக்க கூடிய மாவுச்சத்து அளவு காரணமாக இந்த இரகமானது தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள விவசாயிகளால் பரியிடப்படுக்கறது.

### ஸ்ரீ அபூர்வா

ஸ்ரீ அபூர்வா எனப்படும் மும்மைய மரவள்ளி இரகமானது இருமைய மரபணுப்படியான அம்பகாடான் மற்றும் ஸ்ரீ சஹியா வின் தூண்டப்பட்ட நான்மயத்தின் இனச்சேர்க்கையால் உண்டாக்கப்பட்டது. இந்த இரகம் பத்து மாதங்களில் முதிரக்கூடியதாகவும் தமிழ்நாட்டின் பாசன நிலங்களுக்கு உகந்ததாகவும் விளங்குகின்றது. இந்த இரகமானது தமிழ்நாட்டின் பிரபலமான H-226 (24.8 டன்/ஹெக்டேர்) மற்றும் உள்ளூர் இரகமாகிய முள்ளுவாடியை (26.1 டன்/ஹெக்டேர்) விட அதிக மகசூல் (37.60 டன்/ஹெக்டேர்) தரக்கூடியது. இதன் பிரித்து எடுக்கக்கூடிய மாவுச்சத்து அளவு H-226 (24.1%) மற்றும் முள்ளுவாடியை (25.2%) விட மிக அதிகமாகவும் நிலையானதாகவும் உள்ளது.

| குணாதிசயங்கள் | ஸ்ரீ அதுல்யா | ஸ்ரீ அபூர்வா |
|---|---|---|
| வளரும் தன்மை | நேரானது, உயரமானது, மேல்கிளைகள் கொண்டது | நேரானது, கிளைகள் இல்லாதது / மேல்கிளைகள் கொண்டது |
| தண்டின் நிறம் | சாம்பல் பழுப்பு | மஞ்சள் பழுப்பு |
| தண்டின் சுற்றளவு | 8.5-11.0 செ.மீ | 7.8-11.2 செ.மீ |
| இளந்தளிரின் நிறம் | கருஞ்சிவப்பு | பச்சைக்கருஞ் சிவப்பு |
| இளந்தண்டின் நிறம் | கருஞ்சிவப்பு வரிகள் கொண்ட பச்சை இலைகள் | சிவப்பு வரிகள் கொண்ட பச்சை இலைகள் |
| இலைக்காம்பின் நிறம் | பச்சை சாயல் கொண்ட கருஞ்சிவப்பு | கருஞ்சிவப்போடு கூடிய பச்சை நிறம் |
| இலைக்காம்பின் நீளம் | 26.5-35.6 செ.மீ | 24.5-31.5 செ.மீ |
| இலை வடிவு | அதிகூரிய முனை கொண்ட விரல்கள், விரிந்த கை போன்ற அமைப்பு உடைய இலைகள் | அதிகூரிய முனை கொண்ட விரல்கள் விரிந்த கை போன்ற அமைப்பு உடைய , விரிந்த இலை பிரசுரங்கள் கொண்டது |
| கிழங்கின் பண்புகள் | நீளமானது, உருளையானது பழுப்பு நிறம் கொண்ட தோல், மஞ்சள் நிற பட்டை மற்றும் வெள்ளை சதை கொண்டது. அதிக மாவுச்சத்து (34.8%) கொண்டது. ஒரு செடியின் மொத்த கிழங்கின் எண்ணிக்கை சராசரி 7-12 ஆகும். ஒரு கிழங்கின் சராசரி எடை 0.6 -1.0 கிலோ ஆகும். கிழங்கின் சராசரி நீளம் 36.8 செ.மீ மற்றும் சுற்றளவு 16.5 செ.மீ ஆகும். ஒரு செடியின் மகசூல் சுமார் 3.8 கிலோ ஆகும். | நீளமானது, உருளையானது பழுப்பு நிறம் கொண்ட தோல், மஞ்சள் நிற பட்டை மற்றும் வெள்ளை சதை கொண்டது. அதிக மாவுச்சத்து (33.7%) கொண்டது. ஒரு கிழங்கின் சராசரி எடை 0.5 -1.0 கிலோ ஆகும். ஒரு செடியின் மொத்த கிழங்கின் எண்ணிக்கை சராசரி 9-12 ஆகும். கிழங்கின் சராசரி நீளம் 33.2 செ.மீ மற்றும் சுற்றளவு 15.6 செ.மீ ஆகும். ஒரு செடியின் மகசூல் சுமார் 3.6 கிலோ ஆகும். |
| சாகுபடிக்கு பரிந்துரைக்கப்பட்ட மாநிலங்கள் | தமிழ்நாடு மற்றும் ஆந்திரா | தமிழ்நாடு மற்றும் கேரளா |
| வெளியான வருடம் | 2013 | 2013 |
| சராசரி மகசூல் | 39.00 டன்/ஹெக்டேர் | 37.60 டன்/ஹெக்டேர் |